# பாண்டியர் சமூகத்தில் அந்தணர் நிலை

**மு.கயல்விழி,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, பசசையப்பன் மகளிர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

**ஆய்வுச்சுருக்கம்:** ***பாண்டிய நாட்டில் அந்தணர் பல்வகையினராக வாழ்ந்து வந்தனர். அவர்கள் பாண்டிய அரசர்களால் நன்கு ஆதரிக்கப்பட்டனர். அவர்கள் நன்கு கற்றறிந்தோராக வாழ்ந்தனர். அவர்களுக்காக ஏராளமான அக்ரஹாரங்கள் உருவாக்கப்பட்டன. அவை "சதுர்வேதிமங்கலங்கள்" என்று அழைக்கப்பட்டன. பாண்டிய நாட்டில் அந்தணர்கள் பல்வேறு உயர் பதவிகளை வகித்தனர். அரசர் முதல் சாமானியர் வரை அந்தணர்களைப் போற்றி ஆதரித்தனர். பாண்டியநாட்டு அந்தணர்கள் பல்வேறு சலுகைகளைத் துய்த்தனர்.***

**முக்கியச்சொற்கள்:** ***பாண்டியநாட்டு அந்தணர், கல்வியறிவு, சதுர்வேதி மங்கலம்,*** தொழில்கள், ***உயர் பதவி, சலுகைகள்.***

**முகவுரை**

**"அந்தணர் என்போர் அறவோர்" என்றார் வள்ளுவர். ஒழுக்க நெறியில் நின்ற சான்றோர்களை அவர் அந்தணராகக் கருதினார். அவர் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும் அந்தணர் பலர் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்தாலும், அவர்களை சாதியின் அடிப்படையில் உயர்ந்தோராக அவர் சுட்டிச்செல்லவில்லை. காரணம் சாதி முறை** (Cast System) **என்பது சங்ககாலத்தில் காணப்பெறவில்லை. சங்க காலத்திலும் கபிலர், பரணர்,** நக்கீரர் **போன்ற அந்தணச்சான்றோர்கள் இருந்தனரென்றாலும் அவர்கள் எல்லாம் சாதி அடிப்படையில் உயர்ந்தோராகக் கொள்ளப்படவில்லை. சங்ககாலத் தமிழ்ச்சமுதாயம் தொழில்முறையில் காணப்பட்டது.ஆனால் காலப்போக்கில் காட்சிகள் மாறின.**

**கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பின் வடநாட்டிலிருந்து போந்த ஆரிய அந்தணர்கள் தம்முடன் வருணாசிரமத் தருமத்தைக்** (Varnashrama Dharma or Manu Dharma) **கொண்டு வந்தனர். மனு வகுத்தளித்த இம்முறையை யாது காரணத்தாலோ தமிழ்** மன்னர்களும் தமிழ்மக்களும் **உடனே ஏற்றுக்கொண்டனர்.** இதற்கான காரணம் இன்றுவரை விளங்கவில்லை. **தொழில் அடிப்படையிலான தமிழ்ச்சமூகம் சாதி முறையிலான சமூகமாய் மாறியது. எண்ணிக்கையில் குறைந்த அந்தணர்களைத் தமிழ்ச் சமுதாயம் உச்சி மேற்கொண்டு பாராட்டியது. வேதக்கல்வி, ஒழுக்க நெறிமுறைகள், தூய்மையான வாழ்க்கைமுறை, சமயக் கட்டுப்பாடுகள் இவைகளைக் கொண்ட அந்தணர்களை உயர்ந்தோராகத் தமிழர்கள் போற்றினர். முடியுடை வேந்தர் மூவராலும் போற்றப்பட்ட இவ்வந்தணர்கள் காலப்போக்கில் உயர்ந்தோராய் மதிக்கப்பட்டனர்.** தமிழகத்தில்

குறிப்பாக பாண்டிய நாட்டில் அவர்கள் பெற்ற செல்வாக்கு அளப்பரியது. அவற்றையே இக்கட்டுரை ஆராய்கின்றது.

**பாண்டியநாட்டில் அந்தணரின் வகைகள்**

பாண்டிய நாட்டின் பல இடங்களில் அந்தணர்கள் பரவி வாழ்ந்து வாழ்ந்தனர். அவர்கள் பல வகைப்பட்டனர். அந்தணர்கள் சைவ, வைணவ நெறிகளைப் பின்பற்றினர். சைவப்பெரியோர்கள் “சிவாச்சாரியார்” என்றும் வைணவப்பெரியோர் “ஜீயர்” என்றும் அழைக்கப்பட்டனர். காலப்போக்கில் மலையாள, கன்னட, தெலுங்கு அந்தணர்கள் பாண்டியநாட்டில் நுழைந்து குடியேறினர்.[1] பாண்டிய நாட்டு அந்தணர்கள் பல கோத்திரங்களைச் சார்ந்தவர்கள். அக்கோத்திரங்கள் வருமாறு:

| வ.எண் | கோத்திரங்கள் |
|---|---|
| 01 | பரத்வாஜ கோத்திரம் |
| 02 | வசிஷ்ட கோத்திரம் |
| 03 | கஸ்யப கோத்திரம் |
| 04 | வஜ்ஜிய கோத்திரம் |
| 05 | அகஸ்திய கோத்திரம் |
| 06 | ஆத்திரேய கோத்திரம் |
| 07 | இரதிதார கோத்திரம் |
| 08 | கௌதம கோத்திரம் |

அவர்கள் பல இடங்களில் வாழ்ந்தாலும் தம் கோத்திரத்தையும், பண்புகளையும் ஒருபொழுதும் மறந்திலர்.

**அந்தணரின் கல்விச்சிறப்பு**

பாண்டிய நாட்டு அந்தணர்கள் கல்வி கேள்விகளில் தலைசிறந்து விளங்கினர். அவர்கள் வேதக்கல்வியை நன்கு பயின்று வேள்விகள் பல இயற்றினர். சமயக் கருத்துக்களைப் பரப்பவும், கோயில் வழிபாடுகளை நடத்தவும். புராண இதிகாசங்களைப் பரப்பும் பணியும் செய்தனர். அந்தணர்கள் வசித்த ஊர்களில் வேத முழக்கங்களும், கல்வி ஒலிகளும், விழா ஓசைகளும் ஓங்கி ஒலித்தன. இதையே நம்மாழ்வாரும்,

“வேதவொலியும் விழாவொலியும்

பிள்ளைக் குழா விளையாட்டொலியும்

அறா திருப்பேரெயில் சேர்வன் நானே”

(திருவாய்மொழி:7:3:1)

என்றும்,

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

“ஓதக்கடலொலி போல எங்கும்

எழுந்த நல்வேதத் தொலி நின்று ஓங்கு

தென் திருப்பேரெயில்”

(திருவாய்மொழி:7:3:4)

என்றும் பாராட்டிச்செல்வார். அந்தணர்களின் இயல்புகளை கீழ்கண்டவாறு தளவாய்புரச் செப்பேடுகள் உரைக்கும்.[2]

| வ.எண் | அந்தணர் இயல்புகள் |
|---|---|
| 01 | உண்மையை உரைப்பவன் |
| 02 | அந்தித்தொழுகைகள் இரண்டும் ஓம்புபவன் (சந்தியாவந்தனம்) |
| 03 | முத்தீ வளர்ப்பவன் (காருகாபத்தியம், ஆகவனீயம், தாட்சிணாக்கியம்) |
| 04 | ஐந்து வேள்விகளைச் செய்தவன் (கடவுள் வேள்வி, பிரம்ம வேள்வி,பூத வேள்வி, மானுட வேள்வி, தென்புல வேள்வி) |
| 05 | ஆறுதொழிலில் மேம்பட்டவன் (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்) |

கீழ்க்கண்ட ஆறுவகையான வேதஉறுப்புகளில் வல்லவர்களான அந்தணர்களைச் சிறந்தோரென்று பாண்டியரின் சிவகாசிச் செப்பேடுகளும் கீழ்கண்டவாறு பட்டியலிடும்:

| வ.எண் | வேத உறுப்புகள் |
|---|---|
| 01 | சிட்சை |
| 02 | கற்பம் |
| 03 | வியாகரணம் |
| 04 | சந்தசு |
| 05 | நிறுத்தகம் |
| 06 | சோதிடம் |

## அந்தணர்களின் தொழில்கள்

பாண்டிய நாட்டில் அந்தணர்கள் பல்வகைத்தொழில்களைச் செய்தனர். கல்விப்பணியும், சமயப்பணியும் அவற்றில் முதன்மையானவை. அவர்கள் அரசுப்பணியும் செய்து வந்தனர். சிலர் அர்ச்சகராகவும்.[3] சோதிடராகவும், புரோகிதர்களாகவும் பணியாற்றினர். சிலர் சமையலராகவும் பணிபுரிந்தனர்.[4] பல அந்தணர்கள் அமைச்சர்களாகவும், படைத்தலைவர்களாகவும் உயர் பணியாற்றிச் சிறப்பு பெற்றனர்.[5] படைத்தலைவர்கள் “பிரம்மரையன்”, “பிரமாதிராஜன்” என்று அழைக்கப்பட்டனர்.[6]அரிகேசரி மாறவர்மனிடம் “மாறன்காரி” என்பவனும், நெடுஞ்செழியன் பராந்தகனிடம் “மாறன் எயினன்” என்ற அந்தணர்கள் பணியாற்றினர். இவர்கள் இருவரும் கரவந்தபுரத்தைச் சார்ந்தவர்கள். மாறன்காரி வலிமை மிக்க

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2022, IRJTSR 

சாளுக்கியரையும் தோற்கடித்து விரட்டியவன். நெடுஞ்செழியன் பராந்தகனிடம் “மாகாசாமந்தன் சாத்தன்கணபதி” என்ற அந்தணன் படைத்தலைவனாகப் பணியாற்றினான். அவன் சகோதரனான “சாத்தஞ்சாத்தன்”என்பவனும் படைத்தலைவனாகப் பணியாற்றினான். இவனுக்கு “ஏனாதி”, “வீரமங்கலப்பேரரையன்” என்ற பெயர்கள் உண்டு.

இரண்டாம் வரகுணபாண்டியனிடம் அமைச்சராகப் பணியாற்றிய திருவாதவூரார் என்ற மாணிக்கவாசகரும் அந்தணரே. பராந்தகன் வீரநாராயணனிடம்“இளையானக்கன்” என்ற அந்தணன் அமைச்சராகப் பணியாற்றினான். வீரபாண்டியனிடம் “சோழாந்தகப் பிரம்மரையன்” என்ற அந்தணப் படைத்தலைவன் பணியாற்றினான். முதலாம் குலசேகரபாண்டியனிடம் “ஆரியச்சக்கரவர்த்தி” என்ற அந்தணன் படைத்தலைவனாகப் பணியாற்றினான். இவன் இலங்கையின் மீது படையெடுத்துப் பெருவெற்றி பெற்றான். மூன்றாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனிடம் “மதுராந்தகன் பிரம்மராயன்” என்ற அந்தண அமைச்சன் பணியாற்றினான். முதலாம் ஜடாவர்மனிடம் “எல்லாம் தலையான பாண்டியன் பிரம்மராயன்” என்ற அதிகாரி பணியாற்றியதாகத் திருக்காளக்குடி கல்வெட்டு உரைக்கும்.[7] மாறவர்மன் குலசேகரனிடம் “சுந்தரபாண்டியப் பிரமாதிராயன்” என்ற அந்தணப் படைத்தலைவன் பணியாற்றினான். பாண்டிய நாட்டில் அந்தணர்கள் “வித்யா தேவதைகளால் விரும்பப்பட்டும், யாஞ்ஞு வித்தையோடும், ஏஞ்சாத சாத்திரங்களை கரை கண்டவர்களாகவும்” வாழ்ந்து வந்தனர் என்று கருதப்பட்டது.

அந்தணரின் வாழ்விடங்கள்

பாண்டிய மன்னர்கள் பிற முடியுடை வேந்தர்களை விட அந்தணரைப் போற்றுவதில் அதிக முனைப்பு காட்டினர். அவர்கள் ஏராளமான அந்தணர் வசிப்பிடங்களை உருவாக்கினர். அவை “சதுர்வேதிமங்கலங்கள்,” “பிரமதேயங்கள்” என்று அழைக்கப்பட்டன. அங்கு வசிக்கும் அந்தணர்களுக்கு முழு வரிச்சலுகை வழங்கப்பட்டது. அவ்விடத்தில் வாழப் பிற இனத்தவர் அனுமதிக்கப் படவில்லை. சங்ககாலம் முதலே பல பாண்டிய மன்னர்கள் அக்ரஹாரங்களை உருவாக்குவதில் அதிக அக்கறைக்காட்டினர். சேந்தன் மாறன் என்ற சங்ககாலப் பாண்டிய மன்னன் பல அக்ரஹாரங்களை உருவாக்கினான் என்பதை வைகைக்கல்வெட்டு கீழ்கண்டவாறு குறிப்பிடும்:

“மறங்கெடுத் தறம்பெருக்கி அக்ரஹாரம் பல செய்து”

இதே செய்தியை வேள்விக்குடி செப்பேடும்,

“அந்தணர்க்கும் அசக்தர்க்கும் வந்தணைக என்றீந்தளித்த”

என்று அழகாக உரைக்கும். பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் மறையோருக்கு ஈந்த கிராமத்தைக் களப்பிரர்கள் கவர்ந்து விட அவற்றைக்

கடுங்கோன் பாண்டியன் அந்தணருக்கே திருப்பி அளித்தான் என்று வேள்விக்குடிச் செப்பேடு புகழும். இவ்வரசன் "ஸ்ரீவரமங்கலம்" என்ற கிராமத்தைப் பிரமதேயமாக உருவாக்கி வழங்கினான்.

பராந்தகன் வீரநாராயணன் திருமங்கலம் மற்றும் சோமாசிக்குரிச்சி போன்ற ஊர்களைப் பிரமதேயமாக்கினான் என்று தளவாய்புரச் செப்பேடுகள் குறிப்பிடும். முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆய்க்குடியில் 108 அந்தணர்களுக்காக அவனி வேதாந்தச் சதுர்வேதிமங்கலம் என்ற கிராமத்தை உருவாக்கினான்.[8] முதலாம் சுந்தரபாண்டியன் காலத்தில் சுந்தரபாண்டியச் சதுர்வேதிமங்கலம் உருவாக்கப்பட்டுப் அந்தணர்களுக்கு வழங்கப் பட்டது. இதில் 121 வேதம் ஓதும் அந்தணர்கள் வசித்தனர். இவர்களுக்கு 200 வேலி நிலம் மானியமாக வழங்கப்பட்டது. இவர்களுக்குப் பணிபுரிய மருத்துவர், கணக்கர், தச்சர், கருமார், உவச்சர், நாவிதர் போன்றோர் குடியமர்த்தப்பட்டனர்.[9] விக்கிரம பாண்டியன் திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள கட்டாரிமங்கலம் என்ற கிராமத்தை விக்கிரமபாண்டியச் சதுர்வேதிமங்கலம் என்று பெயரிட்டு 64 வேதம் படித்த அந்தணர்களுக்குத் தானமாக வழங்கினான்.[10]

திருச்சியில் தாயுமானவர் கோயில் கல்வெட்டு மாறவர்மன் விக்கிரமபாண்டியன் என்பவன் கண்ணுடையநாயகி சதுர்வேதி மங்கலம் என்ற கிராமத்தைப் அந்தணர்களுக்கு வழங்கியதை உரைக்கின்றது[11] சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் லஷ்மண சதுர்வேதிமங்கலம் என்ற பிரமதேயக் கிராமம் உருவாக்கப்பட்டது. பாண்டிய மன்னர்களின் அரசியர்களும் பல சதுர்வேதி மங்கலங்களை உருவாக்கியளித்தனர். சான்றாகக் கோதண்டராம சதுர்வேதிமங்கலம் மற்றும் அவனி முழுவதுமுடையான் சதுர்வேதி மங்கலம் போன்றவற்றை அவர்கள் உருவாக்கி அந்தணர்களுக்கு அளித்ததைக் கொள்ளலாம்.[12] பாண்டிய நாட்டில் புதிதாக உருவாக்கப் பட்ட அந்தணர்கள் வசிப்பிடங்கள் அரசன், அரசி, குறுநில மன்னர்கள், கடவுளரின் பெயர்களைத் தாங்கித் திகழ்ந்தன. பாண்டிய மன்னர்கள் உருவாக்கியளித்த பல்வேறு அக்ரஹாரங்கள் வருமாறு:

| வ.எண் | அக்ரஹாரங்கள் |
|---|---|
| 01 | சுந்தரபாண்டியச் சதுர்வேதிமங்கலம் |
| 02 | குலசேகர சதுர்வேதிமங்கலம் |
| 03 | விக்கிரமபாண்டியச் சதுர்வேதிமங்கலம் |
| 04 | உலக முழுவதுமுடையாள் சதுர்வேதிமங்கலம் |
| 05 | அவனி முழுவதுமுடையாள் சதுர்வேதிமங்கலம் |
| 06 | புவன முழுவதுமுடையாள் சதுர்வேதிமங்கலம் |
| 07 | காங்கேயராயன் சதுர்வேதிமங்கலம் |
| 08 | சிவகாம சுந்தரி சதுர்வேதிமங்கலம் |
| 09 | கொல்லம்கொண்ட பாண்டியச் சதுர்வேதிமங்கலம் |
| 10 | சோழ குலாந்தக சதுர்வேதிமங்கலம் |

பாண்டியர்கள் ஆட்சியில் அந்தணர்கள் வசிப்பதற்காக உருவாக்கிய பல வசிப்பிடங்கள் கீழ் வருமாறு:

| வ.எண் | ஊர்கள் | சதுர்வேதி மங்கலங்கள் |
|---|---|---|
| 01 | சேரன் மாதேவி | நிகரிலிச்சோழச் சதுர்வேதிமங்கலம் |
| 02 | பாண்டவர் மங்கலம் | பஞ்சபாண்டவர் சதுர்வேதிமங்கலம் |
| 03 | மன்னர் கோயில் | இராஜராஜச் சதுர்வேதிமங்கலம் |
| 04 | கருங்குளம் | தெலிங்ககுலக்காலச் சதுர்வேதி மங்கலம் |
| 05 | நற்செய்கை புத்தூர் | மந்தரகௌரவச் சதுர்வேதிமங்கலம் |
| 06 | ஆற்றூர்-சேந்தமங்கலம் | அவனிசேகரச் சதுர்வேதிமங்கலம் |

**அந்தணரின் உரிமைகளும் சலுகைகளும்**

பாண்டிய நாட்டில் அந்தணர்களுக்கு உரிமைகளும், சலுகைகளும் தாராளமாக வழங்கப்பட்டன. அவர்களுக்குத் தனி வீடுகள்,[13] மனைகள்,[14] நிலங்கள்,[15] நெல்,[16] பணம்[17] போன்றவற்றைப் பல தரப்பினரும் தாராளமாக வழங்கினர். திருக்கோயில் உரிமைகள் யாவும் அந்தணருக்கே வழங்கப்பட்டன. கோயில்களில் முதல் பிரசாதம் பெறும் உரிமையும் அவர்களுக்கே வழங்கப்பட்டது.[18] கோயில் சொத்துகளைக் கண்காணிக்கும் உரிமையும் அந்தணர்களுக்கு வழங்கப்பட்டது. அக்கோயில் சொத்துகளில் கடன் வாங்கும் உரிமையும் அவர்கள் பெற்றிருந்தனர். சான்றாக அம்பாசமுத்திரத்தில் உள்ள திருவாலீஸ்வரர் கோவிலுக்கு வழங்கப்பட்ட தொகையை அக்கோயிலில் பணிபுரிந்த “திருத்தாண்ட நம்பி” என்ற அந்தணன் கடனாகப் பெற்றுக்கொண்டான். பெற்ற கடனுக்கு வட்டியும் முதலுமாகக் கார்த்திகை தீபத் திருவிழாவிற்கு நெல்லாக வழங்கினான். மதுரை மாவட்டம் திருவாதவூர் திருமலைநாதர் கோவிலுக்கு அடுக்களைப்புரமாக (திருக்கோயில் உணவுக்கு வழங்கப்பட்ட தானநிலம்) வழங்கப்பட்ட நிலத்தை உருத்திரபட்டன் என்ற அந்தணன் தானே பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக அக்கோவிலுக்குத் தினமும் பிரசாதம் தயாரித்து வழங்கப் பொருட்களையும், பணத்தையும் வழங்கினான்.[19] இவ்வாறு அந்தணர்கள் கோயில் சார்ந்து பல உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்தனர்.

இது தவிர நாட்டின் பல்வேறு பகுதிகளில் அந்தணர்கள் பயன்படுத்துவதற்காகப் பல குளங்கள் வெட்டப்பட்டன. இக்குளங்கள் இன்றுவரை “பார்ப்பனர் குளங்கள்” என்ற பெயருடன் அழைக்கப் படுகின்றன. சான்றாகத் தாரமங்கலத்தைச் சார்ந்த அரசு அதிகாரி ஒருவன் இலட்சுமண சதுர்வேதிமங்கலத்துப் அந்தணர்களுக்காக ஒரு குளத்தை வெட்டினான். அதே சமயம் பாண்டிய மன்னர்கள் திருக்கோயில் விவகாரங்களில் தவறு செய்பவர்கள் அந்தணர்களாக இருந்தாலும் தண்டித்தனர். கோயில் பணிக்கு அமர்த்தப்பட்ட சில பாண்டியநாட்டு அந்தணர்கள் கோயில் நிலங்களை அபகரித்தனர். இவை கண்டு பிடிக்கப்பட்டு அவர்களிடமிருந்து நிலங்கள் மீட்கப்பட்டதுடன் அவ்வந்தணர்களும் தண்டிக்கப்பட்டனர். சான்றாகக் கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப் புலியூர் பாடலீஸ்வரர் கோயில் நிலத்தை விக்கிரம பாண்டியன்



© 2022, IRJTSR 

காலத்தில் அந்தணர்கள் சிலர் அபகரித்தனர். இது பற்றி வழக்கு தொடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கோயில் நிலங்கள்மீட்டுக் கோயிலுக்கே திரும்பவும் வழங்கப்பட்டது. பாண்டிய மன்னர்கள் அந்தணர்களிடம் மரியாதை கொண்டிருப்பினும் திருக்கோயில் விவகாரங்களில் தவறு செய்வோர் அந்தணர்களாக இருப்பினும் பாரபட்சமின்றி தண்டித்தனர்.

நிறைவுரை

ஒரு சமூகம் சிறப்புடன் செயல்பட வேண்டுமென்றால் அது தொழில்முறையிலான கட்டமைப்பினைக் கொண்டிருத்தல்வேண்டும். மாறாக சாதிமுறையிலான கட்டமைப்பைக் கொண்டிருந்தால் அது பலவிதத் தீமைகளுக்கு வழிகோலும். மேல் நாடுகளில் (Western Countries) அன்று முதல் இன்று வரை தொழில் முறையிலான சமூகமே செயல்படுவதை எண்ணிப் பார்க்கலாம். இது தவிரச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் தோன்றுமாயின் அது அச்சமூகத்தின் புண்ணாக இருந்து புரையோடச்செய்துவிடும். பாண்டிய மன்னர்கள் மாபெரும் வீரர்களாகவும், விவேகம் கொண்டவர்களாகவும் இருந்த போதிலும் அவர்கள் அந்தணரைக் கண்டு யாதுகாரணத்தாலோ விலகி நின்றனர். எனவே அவர்களுக்கு அளவற்ற சலுகைகளை வாரிவழங்கி அவர்களை முன்னிலைப்படுத்தினர். பாண்டியர்களின் ஆதரவால் அந்தணர்கள் பாண்டிய நாட்டில் பலவிதச் சிறப்புகளைப்பெற்றுத் திளைத்தனர்.

சோழர்களும் பாண்டியர்களைப் போன்றே நிர்வாகச்சிறப்பு மிக்கவர்கள்தானென்றாலும் அவர்களின் சமுதாயத்தில் தமிழ்ப் பெரியோர்களுக்கும், தமிழ் ஆன்மிகவாதிகளுமே அதிக முக்கியத்துவம் பெற்றனர். சோழர்கள் அந்தணர்களுக்கு சலுகைகள் வழங்கினாலும் அவர்களை தம் கட்டுக்குள்ளே வைத்திருந்தனர். ஆனால் பாண்டியருடைய சமுதாயத்தில் எல்லா நிலையிலும் அந்தணர்களே ஆதிக்கம் செலுத்தினர். பாண்டிய நாட்டில் அந்தணர்கள் பெற்ற ஆதிக்கமும், செல்வாக்கும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தி விட்டுச்சென்றது. அங்கு காலப்போக்கில் சாதிமுறைகள் இறுகின. நாடெங்கும் சமூகக்குழப்பங்கள் மலிந்தன. சமூகத்தில் சரி செய்யவியலாத பெரும்விரிசல்கள் தோன்றின. இச்சமுதாயச் சீர்கேடுகளை தடுக்க வேண்டிய பாண்டிய மன்னர்கள் ஏனோ வாளாவிருந்தனர். அவர்கள் அரசியல் குழப்பத்தில் மூழ்கிக் கிடந்தனர். போட்டியும், பொறாமையும் , சதிகளும், வஞ்சமும் பிற்காலப்பாண்டிய மன்னர்களை ஆட்டிப் படைத்தன. எனவே இச்சீர்கேடுகள் பல்கிப்பெருகி வலிமை மிக்க பாண்டியர்களையும் வலிமை இழக்கச்செய்தது. உலக வரலாற்றில் நீண்ட நெடுங்காலம் ஆட்சிசெய்தவர்கள் பாண்டியர்களேயாவர். அவர்களைப் போன்ற பாரம்பரியமிக்க அரசு மரபினரை காண்பதரிது. உலகில் வேறெங்கும் காணவியலாத பழமைச்சிறப்பும், புராதனப்பெருமையும், அரசியல் மேம்பாடும் ஒருங்கேக்கொண்ட அவர்களின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாய் அமைந்தது.



© 2022, IRJTSR

**Abbrevation**

ARE- Annual Report on Indian Epigraphy

**அடிக்குறிப்புகள்**

1. ARE No:86/1960-61
2. பாண்டியர் செப்பேடுகள் பத்து-ப:137
3. ARE No:447/1916
4. ARE No:279/1941-42
5. ARE No:62/1916
6. ARE No:554/1916
7. ARE No:62/1916
8. ARE No:14/1955-56
9. ARE No:18/1958-59
10. ARE No:277/1913
11. ARE No:322/1955-56
12. ARE No:377/1935-36
13. ARE No:42/1936-37
14. ARE No:49/1936-37
15. ARE No:462/1921
16. ARE No:324/1916
17. AREB No:290/1914
18. ARE No:467/1909
19. ARE No:487/1962-63

**பார்வை நூற்பட்டியல்:**

[1] Neelakanta Sastri.K.A, (1929), The Pandiyan Kingdom, London: Luzac & Co

[2] Raman.K.V. (1972), Some Aspects of Pandiyan History in the Lights of Resent Discoveries, Chennai: University of Madras

[3] Pillai.K.K. (1969) A Social History of The Tamils, Chennai: University of Madras.

[4] Swaminathan.A, (1991), Social and Cultural History of Tamil Nadu, Chennai: Deepa Publications.

[5] பாண்டியர் செப்பேடுகள் பத்து,(1967), சென்னை: தமிழ்வரலாற்றுக் கழகம்

[6] பிள்ளை.கே.கே,(2013), தமிழ்நாட்டு வரலாறு-மக்களும் பண்பாடும், சென்னை: உலகத்தமிழாராச்சி நிறுவனம்

[7] இராஜசேகரத் தங்கமணி.ம.(1978), பாண்டியர் வரலாறு, சென்னை: தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்

[8] இராமன் கே.வி,(1977) பாண்டியர் வரலாறு, சென்னை: தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்

[9] சதாசிவ பண்டாரத்தார்.தி.வை,(1972) பாண்டியர் வரலாறு, திருநெல்வேலி: சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்